O.S.No. 62/2017

வா.சா.1, திரு. மதுரப்பா
நாள் : 07.03.2026 நேரம் : 11.25AM

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1) நான் 18.03.1997 ம் தேதியிட்ட வா.சா.ஆ.1 ஆவணமான மார்டின் வகையறாவிடமிருந்து கிரையம் பெற்ற இடத்தில் தான் வீடு கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது பூர்விக சொத்தில் தான் வீடு கட்டியுள்ளேன். வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள கிரைய சொத்தில் தற்போது என்ன உள்ளது என்றால் காலி இடமாக உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள பிராதில் மார்டின் வகையறாவிடமிருந்து கிரையம் பெற்ற இடத்தில் வீடு கட்டி குடியிருந்து வருகிறேன் என்று சொல்லி இருந்தால் அது தவறுதான் என்றால் சரிதான். தாவா சொத்து சம்மந்தமாக ஆணையர் தாக்கல் செய்துள்ள 3 அறிக்கைகளையும் நான் ஆட்சேபனை செய்கிறேனா என்றால் ஆட்சேபனை செய்கிறேன். மேற்படி ஆணையர் அறிக்கைகளின் மீது நான் மேல் நடிவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் இல்லை. 3 வது முறையா தொழில் நுட்ப கருவியின் (GPS) உதவியுடன் மற்றும் வருவாய் துறை ஆவணங்களின் அடிப்படையில் தாவா சொத்து அளக்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி தாவா 1வது இலக்க சொத்தானது மார்டின் வகையறாவிற்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி நான் கிரையம் வாங்கிய சொத்திற்கும் பிரதிவாதி குடியிருக்கும் வீட்டிற்கும் தென்வடலாக எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 120 அடிக்கு மேல் இருக்கும்.

2. பிரதிவாதி வீட்டிற்கும் அதற்கும் தெற்கே உள்ள வா.சா.ஆ.1 கண்ட ஆவணத்தில் உள்ள சொத்திற்கும் இடையே என்ன உள்து என்றால் காலி இடம் உள்ளது. அதை நான் 30 வருடங்களாக பாதையா பயன்படுத்தி வருகிறோம். மேற்படி காலி இடம் மார்டின் வகையறாவிற்கு பாத்தியப்பட இடம் என்றால்

மேற்படி காலி இடம் மார்டின் வகையறாவிற்கு பாத்தியப்பட்ட இடம் என்றால் சரிதான். மேற்படி மார்டின் வகையறாவிற்கு பாத்தியப்பட்ட காலி இடம் தான் இந்த வழக்கில் 1வது இலக்க சொத்து என்றால் சரிதான். தாவா 2 வது லக்க சொத்தான வாய்கால் 1வது லக்க சொத்திற்கு எந்த பக்கம் உள்ளது என்றால் கிழக்கு பக்கம் உள்ளது. தாவா 2 வது லக்க சொத்தான வாய்காலானது அரசிற்கு பாத்தியப்பட்ட பொது சொத்து என்றால் சரிதான். தாவா 1வது லக்க சொத்து மார்டின் வகையறாவிற்கு பாத்தியப்பட்டசொத்து என்பதாலும் தாவா 2 வது லக்க சொத்து அரசுக்கு பாத்தியப்பட்டது என்பதாலும் எனக்கு எந்த பரிகாரமும் கோர உரிமை இல்லை என்றாலும் சரியல்ல. பிரதிவாதி விமலா குடியிருக்கும் வீடு அவரால் 1989 ம் வருடம் சுற்றுச்சுவருடன் கட்டப்பட்டது என்றால் வீடு 1989 ம் கட்டப்பட்டது சுற்றுசசுவர் அதற்கு பின்னர் கட்டப்பட்டது. சுற்றுச்சுவர் எப்போது கட்டப்பட்டது என்று எனக்கு நினைவில்லை. 1989 ம் வருடம் பிரதிவாதி வீடு கட்டும் போது சுற்றுச்சுவரும் சேர்த்து கட்டப்பட்டது என்றால் சரியல்ல.

3. பிரதிவாதி குடியிருக்கும் வீட்டின் சுற்றுச்சுவருக்கு மேற்கே 3 அடி தள்ளி தான் தாவா 2 லக்க சொத்தான வாய்கால் உள்ளது என்றால் சரியல்ல. வாய்காலில் தான் கட்டியுள்ளார்கள். சுற்றுச்சுவரின் மேற்கே 3 அடி தள்ளி தான் வாய்கால் உள்ளது என்றாலும் நான் தான் வாய்காலை அழித்து பாதையாக பயன்படுத்தி வருகிறேன் என்று ஆணையர் அறிக்கையில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. தாவா 2வது லக்க சொத்தான வாய்காலை அழித்து பாதையாக அனுபவித்து வருவதை 25.07.2017 ம் தேதி சென்னை உயர் நீதிமன்ற மதுரைகிளையின் உத்தரவின் படி பரமக்குடி சார் ஆட்சியர் வருவாய் துறை அதிகாரிகள் துணையுடன் இடத்தை அளவீடு செய்து அறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. வருவாய் துறை அதிகாரிகள் அறிக்கை தாக்கல் செய்த பின்னரும் அதை ஏற்க மறுத்து இன்று வரை தாவா 2வது லக்க சொத்தை நான் பாதையாக பயன்படுத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ம் படி மார்டின் வகையறாவிடமிருந்து 7 1/2 சென்டை கிரையம் பெற்று விட்டு 14 சென்டிற்கு பட்டா பெற்று பிரதிவாதி

இடத்தை ஆக்கிரமித்து முயற்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதின் மூத்த மகன் மருத்துவர், 2ம் மகன் பொறியாளர் மற்றும் 3ம் மகன் வழக்கறிஞர் என்றால் பிரதிவாதிகக்கு 3 மகன்கள் உள்ளார்கன். அவர்கள் என்ன தொழில் செய்து வருகிறார்கள் என்று எனக்கு தெரியாது. பிரதிவாதி குடியிருக்கும் வீடு 2ம் மகனுக்கு சொந்தமான வீடு என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதி குடியிருந்து வரும் வீடு அவரின் 2ம் மகனுக்கு பாத்தியமான வீடு என்பதால் பிரதிவாதி இந்த வழக்கிற்கு அவசியமற்ற தரப்பினர் என்றால் சரியல்ல. பிரதிவாதி பெயரில் தான் பட்டா மற்றும் பத்திரம் உள்ளது.

4. பிரதிவாதி குடியிருக்கும் வீட்டிற்கு தாவா வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றாலும் அவர் பெயரில் உள்ள ஆவணங்கள் தாவா சொத்திற்கு தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. தாவா 2வது லக்க சொத்து தொடர்பா ஏற்கனவே அசல் வழக்கு 147/2017 ல் ஏற்பட்ட தீர்ப்பை நான் மதிக்காமலும் நான் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தாக்கல் செய்த நீதிபேராண்மை மனு எண்11262/2017 ல் ஏற்பட்ட உத்தரவின் படி வருவாய் துறை அதிகாரிகள் அளந்து தாக்கல் செய்த அறிக்கையினை மதிக்காமலும் தாவா 2வது லக்க சொத்தை அழித்து ஆக்கிரமிப்பு செய்து பாதையாக புலங்கி கொடு பொய்யான சங்கதிகளை கூறி இந்த வழக்கை பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 முதல் 4 ஆவணங்களுக்கும் வழக்கு சொத்துகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

5. வழக்கு சொத்துகளில்எனக்கு எந்த உரிமையும் இல்லாததால் நான் இந்த வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. நான் பொய்யான சங்கதிகளை கூறி வயதான 1ம் பிரதிவாதி மீது இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளதால் அதிகபட்ச செலவு தொகையுடன் இந்த வழக்க தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல,

விசாரணை முடிவுற்ற நேரம்: 11.50 AM

APARNA JUDIT CHARLES
Digitally signed by APARNA JUDIT CHARLES
Date: 2026.03.07 15:17:12 +0530